**எகலியகொட பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 12 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 05 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 22 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து எகலியகொட பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பின்வரும் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) காசுப்பாய்ச்சல் கூற்று
(ii) முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு
(iii) தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) எந்தவிதமான இனங்காணலுமின்றி ஊழியர் கடன் பதிவேட்டை அடிப்படையாகக் கொண்டு ஊழியர் கடன் பேரேட்டுக் கணக்கில் ரூபா 185,379 தொகையான அறவிட வேண்டிய ஊழியர் கடன் நாட்குறிப்பு இலக்கம் 01 இன் மூலம் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வருமானப் பதிவேட்டின் மீதிக்கும் அதற்குரிய பேரேட்டுக் கணக்கின் மீதிக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் தொடர்பாக எதுவும் கண்டறியப்படாமல் ஆதன வரி, ஏக்கர் வரி, வாடகை மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டண

நிலுவை வருமானம் ரூபா 679,776 தொகை நாட்குறிப்பு இலக்கம் 01 இன் மூலம் பேரேட்டுக் கணக்குளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(இ) ஆரம்ப காசு மீதி, வங்கிக் கணக்கு மீதியுடன் ஏற்பட்ட ரூபா 13,611 தொகையான வேறுபாட்டிற்கான காரணங்கள் இனங்காணப்படாமல் நாட்குறிப்பு இலக்கம் 01 இன் கீழ் திரண்ட நிதியத்தின் மூம் சீராக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டின் போது புறச் செயற்பாட்டுக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக கடன் மற்றும் மானியங்களின் கிடைப்பனவு மற்றும் அக்கடன் மற்றும் மானியங்களின் மூலம் செலவினங்களைச் செய்தல், மானியப் பணக் கணக்கிலிருந்து புறம்பாக பொது வைப்புக் கணக்கின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்குரித்தான அச் செலவினம் ரூபா 36,531,540 தொகை மீளாய்வாண்டின் செலவினத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. மேலும் முன்னைய ஆண்டிற்குரியதாகக் கிடைத்த ரூபா 23,568,735 தொகையான மூலதன வருமானம் மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான சொத்துப் பேரேட்டுக் கணக்கின் மீதிகளுக்கும் மூலதன ஈடுபடுத்தலுக்கான பங்களிப்புக் கணக்கின் மீதிகளுக்குமிடையே ரூபா 46,696 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஊ) மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய வருமானமாகக் காண்பிக்கப்பட்ட ஏக்கர் வரி வருமானத்தின் ஆரம்ப மீதி ரூபா 192,662 தொகை மீளாய்வாண்டின் கணக்குகளுக்கு பிரதி செய்யும் போது கைவிடப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதி மீளாய்வாண்டின் பற்றுச்சீட்டிடப்பட்ட வருமானத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது.

(எ) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குச் செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி காணப்படாத போதிலும் பேரேட்டுக் கணக்கின் படி ரூபா 2,238,185 தொகையான பெறுமதி சேர்வரி பொறுப்பொன்றாக இருந்தது.

(ஏ) வைப்பு மீளச் செலுத்துதல் ரூபா 96,215 தொகை கடன்கொடுத்தோர் கொடுப்பனவின் கீழ் கொண்டுவரப்பட்ட காரணத்தால் பொழிப்புச் செலவினப் பதிவேட்டில் கடன்கொடுத்தோர் கொடுப்பனவிற்கும் பேரேட்டுக் கணக்கின் பெறுமதிக்குமிடையே வேறுபாடு காணப்பட்டது.

(ஐ) முன்னைய ஆண்டிற்குரிய வேலைகளுக்காக நிறுத்திவைத்தல் பணக்கொடுப்பனவு வைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 05 வேலைகளுக்குரிய ரூபா 97,124 தொகையான நிறுத்திவைத்தல் பணக்கொடுப்பனவு திரண்ட நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 4,556,613 தொகையான கடன்கொடுத்தோர் மீதியைத் தீர்த்தல் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 06 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,727,373 ஆக இருந்ததுடன் பயன்பாட்டுப் பதிவேடுகளின் படி அந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 11,136,311 ஆனமையால் வேறுபாடு ரூபா 4,408,938 ஆக இருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
|---|---|---|
| இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை - 1992 | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(2)(இ) மற்றும் 371(5) | 1995 ஆம் ஆண்டு முதல் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்திற்குரிய ரூபா 204,249 கூட்டுத்தொகையான முற்பணம் தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | 2014 சனவரி 20 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,253,639 கூட்டுத்தொகையான உப கட்டுநிதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களைக் கடந்த ரூபா 791,347 கூட்டுத்தொகையான காசோலைகள் தொடர்பில் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,522,906 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 164,609 ஆக இருந்தது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிச் செயற்பாடுகளின் மிகை 825 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஏனைய வருமானம் அதிகரித்தமை இதற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 7,613 | 7,670 | 7,979 |
| வாடகை | 7,186 | 4,087 | 729 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,105 | 578 | - |
| ஏனைய வருமானம் | 24,016 | 23,545 | 8,960 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட மற்றும் சேகரித்த வருமானத்தை ஒப்பீடுசெய்த போது வாடகை வருமானத்திலும், அனுமதிப்பத்திரக் கட்டண வருமானங்களிலும் மற்றும் சேவைக் கட்டண வருமானங்களிலும் மதிப்பிடப்பட்ட வருமானத்தைவிட சேகரிக்கப்பட்ட வருமானத்தில் முறையே 75 சதவீதம், 263 சதவீதம் மற்றும் 232 சதவீத குறைவைக் காட்டியது.

### 2.3.3 வாடகை

2012 திசெம்பர் 28 ஆந் திகதி வர்த்தமானி அறிவித்தலின் படி கைத்தொழில் வாடகை விதித்து அறவிடுவுதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தும், சபை அதிகார பிரதேசத்திற்குரிய கைத்தொழில்கள், வியாபார அனுமதிப்பத்திரம் மற்றும் வியாபார வாடகைகள் தொடர்பான பதிவேடொன்று உரிய பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 கடை வாடகை

புதிய சந்தைத் தொகுதியில் புதிய கடைகளை வாடகைக்கு வழங்கும் போது வாடகையாளரினால் ஒரே தடவையில் செலுத்தவேண்டிய பணம் (key Money) செலுத்தாமையின் காரணமாக அந்தக் கடை உரிமையாளர்களுக்கு எதிராக சபையினால் 2007 ஆம் ஆண்டின் போது வழக்குத் தொடரப்பட்டிருந்ததுடன் அவர்களிடமிருந்து சபைக்கு அத்திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டிய வாடகைப் பணம் ரூபா 295,750 தொகையும் உடன்படிக்கை பிணை மற்றும் பிணை வைப்புப் பணமாக ரூபா 130,612 தொகையும், அறவிடவேண்டியிருந்தது. வழக்குத் தொடரப்பட்டு 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அதற்காக இதுவரையும் இறுதித் தீர்ப்பிற்கு உடன்படாதிருந்ததுடன், அந்த வாடகையாளர்கள் தற்போது மாதாந்த வாடகைப் பணம் செலுத்தி கடைகளில் மேலும் தரித்திருக்கின்றமை அவதானிக்கப்பட்டது. கடை மற்றும் சந்தை வாடகையாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டிய வாடகை வருமானம் ரூபா 293,375 ஆகும். அதில் 44 சதவீதம் ஆண்டொன்றிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்படுகின்றது.

### 2.3.5 விளம்பர அறிவித்தல் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் விளம்பர அறிவித்தல், நிரந்தர அறிவித்தல் பதாதை போன்றதாக பாரியளவில் அறிவித்தல் விளம்பரங்கள் காணப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட போதிலும் அவற்றை இனங்கண்டு, 2012 திசெம்பர் 28 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பட்டோலைக்குரிய கட்டணங்களை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை, மேலும் இனங்காணப்பட்ட 06 சந்தர்ப்பங்களின் போது ரூபா 172,247 தொகையான வருமானத்தையும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.6 நீர்க்கட்டணம்

2013 ஆம் ஆண்டிற்காக சபையின் நீர் செயற்திட்டத்தின் கீழ் கிடைப்பனவு ரூபா 52,675 ஆக இருந்ததுடன் செலவினம் ரூபா 89,618 ஆனமையால் செயற்திட்டத்தின் வருமானத்தில் பராமரிப்புச் செலவினத்தையாவது ஈடுசெய்துகொள்ள முடியாத நிலை காணப்பட்டது. 2013 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 90,385 நிலுவை வருமானமொன்று இந்த செயற்திட்டம் தொடர்பாகக் காணப்பட்டது. பல வருடகாலமாக காணப்பட்ட அந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.7 ஏனைய வருமானம்

(அ) 2011 ஆகஸ்ட் 23 ஆந் திகதி நடைபெற்ற சபைக் கூட்ட அறிக்கையின்படி நகரத்தில் பிரபல்யமான இடங்களில் நிறுத்தி வைக்கப்படுகின்ற வாகனங்கள் மற்றும் பொருட்களை பகிர்ந்தளிக்கும் வாகனங்களுக்காக கட்டணமொன்றை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் கட்டண அறவிடல்கள் கணக்காய்வுத் திகதியான 2014 சனவரி 20 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கெட்டஹெத்த மாட்டிறைச்சிக் கடையை வாடகைக்கு வழங்குவதற்கு பெறப்பட்ட கூறு விலைகளுக்கிடையே முதலாவது மற்றும் இரண்டாவது கேள்விதாரர்களின் கேள்வி நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும், மூன்றாவது கேள்விதாரர் சமர்ப்பித்திருக்கும் போது அதற்காக கேள்வியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் சபைக்குக் கிடைக்க வேண்டிய ரூபா 961,404 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 சனவரி மாதம் முதல் வங்கிக் கணக்கிணக்கம் மற்றும் காசேட்டிற்கிடையே காணப்படுகின்ற ரூபா 12,141 தொகையான வேறுபாட்டை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2007 ஏப்ரல் 03 ஆந் திகதி விதிச் செப்பனிடுகையை பழுதுபார்ப்பதற்காக ரூபா 350,000 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன், அந்த வீதிச் செப்பனிடுகை 2010 ஆம் ஆண்டின் போது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தும் முற்பணத்தை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உறுப்பினர் நிதி ஏற்பாட்டின் கீழ் ரூபா 434,805 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் பொருள் உதவிகளை வழங்குவதற்காக நலனாளிகளைத் தெரிவு செய்த மாதிரிகள் மற்றும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக நிறுவனத்தைத் தெரிவு செய்த மாதிரிகளும் எவ்வாறானது எனவும் பொருள் உதவிகளை கொள்வனவு செய்வதற்காக கூறுவிலை கோரல், கேள்விச் சபை தீர்மானங்களைப் போன்று பொருள் பகிர்ந்தளிப்பதற்குரிய முறையான எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) புரள்வு வரி ரூபா 77,713 தொகை மற்றும் சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 6,427 தொகை என ரூபா 84,140 கூட்டுத்தொகையான செலவு மீதியொன்று செயற்பாடற்ற கணக்காக நிதிக்கூற்றுக்களில் காணப்பட்டதுடன் 03 வருடங்கள் கடந்திருந்த போதிலும் இந்த மீதியை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் செலவினத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 1,482,910 தொகையான மேலதிக பட்டியல்களுக்கான அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் செலவினத்திற்குரியதாக சரியாக இனங்காணப்படாமல், அவ்வாறான எவ்வித பதிவேட்டுச் சான்றுகளும் இல்லாமல் வாய்மூல தகவல்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு உறுப்பினர் நிதி ஏற்பாட்டின்

கீழ் ரூபா 585,000 தொகையான செலவினம், கடன்கொடுத்தோரின் கீழ் கொண்டுவரப்பட்டு மீளாய்வாண்டின் செலவினத்தில் ஈடுசெய்யப்பட்டிருந்தது.

**3.3 நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 4,791,500 ஆக இருந்ததுடன், அந்தச் செலவின மதிப்பீடு பொறியியலாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தயாரித்து தலைவரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. பகிரங்க கூறுவிலை கோருவதற்கோ அல்லது உரிய கேள்வியை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி கேள்விச் சபைத் தீர்மானத்தின்படி ஒப்பந்தக்காரர் தெரிவு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 900,000 தொகையான முற்பணத்தைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எஹலியகொடை வத்த – கொஹிலதெனியவில் 01 ஏக்கர் அளவிலான காணியில் கட்டிடத்துடன் 2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுப்பசளைச் செயற்திட்டம் தற்போது 06 வருடங்கள் முதல் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் கூரைக்காக செவிலி தகரம் ஈடுபடுத்தப்பட்டு 100 அடி அளவிலான நீளத்தையுடைய கட்டிடத்தில் 02 குப்பை வண்டிகள், 02 வீல்பெரோ, 02 சவல் உள்ளடங்கலாக ஏனைய உபகரணங்களும் செயற்பாடற்று களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. மேலும் பசளை தயாரிக்கும் இயந்திரம் உள்ளடங்கலாக உபகரணங்களும் கருவிகளும் கணிசமான அளவில் 06 வருடங்கள் தொடக்கம் செயற்பாடற்று துருப்பிடித்துக் காணப்படும் கூட்டுப்பசளை செயற்திட்டத்திற்கான கட்டிடமும் கொங்கிரீட் கல் தயாரிப்பதற்காக ஈடுபடுத்தப்படும் கட்டிடமும் உடைந்துவிழும் நிலையில் காணப்பட்டது.

(ஆ) கூட்டுப்பசளை செயற்திட்டத்திற்காக காவலர் மற்றும் தொழிலாளர் நாளாந்த சேவையில் ஈடுபடுத்தப்பட்டு 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ரூபா 1,057,445 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 5(7) இன் பிகாரம் நிதி மற்றும் களஞ்சியம் தொடர்பாக போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படுவது தலைவரின் பணியாக இருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

22 செலவின விடயங்களுக்குரியதாக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 5,134,228 தொகையான நிதி ஏற்பாடு மீளாய்வாண்டின் இறுதியின் போது சேமிக்கப்பட்டிருந்ததுடன் 05 செலவின விடயங்களுக்குரியதாக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 602,000 தொகையான நிதி ஏற்பாடு மீளாய்வாண்டின் இறுதியின் போது எவ்வித செலவினமும் செய்யப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) நிதிக் கட்டுப்பாடு
(உ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்